**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**
**C.C.No.128 /2019**

2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் நாள் வெள்ளி கிழமை அரசு தரப்பு சாட்சி–05, திரு.மணிகண்டன் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மணிகண்டன் | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | 14 | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | LW10 / PW05 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை:**

1) நான் சூரியமணல் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன பாலுச்சாமி எனது உறவினர் ஆவார்.இவ்வழக்கின் புகார்தாரர் அவரின் மகன் ஆவார்.

2) 28.03.2019 ம் தேதி இரவு 09.20 மணியளவில், பாலுச்சாமி தனது சைக்கிளில் கிழக்கிலிருந்து திருச்சி சாலையில் வந்துக்கொண்டிருந்தார். அப்போது எதிரி மணிமாறன் தனது இருசக்கர வாகனத்தில் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து, ஹாரன் அடிக்காமல், பாலுச்சாமியின் சைக்கிளில் மோதி விட்டார். அப்போது பாலுச்சாமிக்கு தலையிலும், நெஞ்சிலும் அடிபட்டது. சம்பவத்தை நானும் பிரவீனும் நேரில் பார்த்தோம். அவரை 108 ஆம்புலன்சில் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பின்பு மேல்சிகிச்சைக்காக தஞ்சை மீனாட்சி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவர் இறந்துவிட்டார்.

3) என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். ( **பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அதசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** – எதிரி தரப்பில் வழக்கறிஞர் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

/உண்மை நகல்/

ஒம்/–S.தனலெட்சுமி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.